இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம்
தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்

**வேளாண்மை அறிவியல் நிலையம்**

சிக்கல், நாகப்பட்டினம் மாவட்டம்

*****

*அன்புடையீர் வணக்கம்!*

கீழ்கண்ட செய்திக் குறிப்பினை தங்களின் மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் மீன்வளர்ப்பில் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் – திறன் மேம்பாட்டு பயிற்சி நிறைவு விழா"**

நாகப்பட்டினம் மாவட்டம், சிக்கல், வேளாண்மை அறிவியல் நிலையத்தில், ஹைதராபாத் தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மை நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் மீன்வளர்ப்பில் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சிகள் ஆதிதிராவிடர் வகுப்பைச்சார்ந்த விவசாயிகளுக்கு ஐந்து நாட்கள் 08.05.2023 முதல் 12.05.2023 வரை நடத்தப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ. கோபாலகண்ணன் அவர்கள் வரவேற்புரை வழங்கினர். பின்னர் பயனாளிகள் ஐந்து நாட்கள் பயிற்சி குறித்து தங்களது கருத்துகளை பதிவு செய்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. நிறைவு விழாவில் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் என். பெலிக்ஸ் அவர்கள் கலந்து கொண்டு தீவனம் சார்ந்த மீன் வளர்ப்பு, சில்லறை விற்பனை மூலம் அதிக இலாபம் ஈட்டுவது குறித்த சிறப்புரையாற்றினார். மேலும் பயிற்சியில் கலந்துகொண்ட நாகை மாவட்டத்தைச் சார்ந்த 80 விவசாயிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் இடு பொருட்களான தென்னங்கன்று, சில்பாலின் தார்பாய், கோழி குஞ்சுகள் மற்றும் மீன் தீவனம் ஆகியவற்றை வழங்கினார். இவ்விழாவில் தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மை நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர். எம். பாலகிருஷ்ணன் அவர்கள் பயிற்சியின் தாக்கங்ககளை விவசாயிகளிடையே கண்டறிந்து மேலும் இதுபோன்ற பயிற்சிகள் இனிவருங்கலங்களிலும் நாகை மாவட்ட விவசாயிகளுக்கு நடத்த திட்டமிட்டுள்ளதாக கூறினார். தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் மா. ராஜகுமார் அவர்கள் நன்றி உரை ஆற்றினார். மீன்வள விரிவாக்க தொழில்நுட்ப வல்லுநர் திரு. ஹினோ பெர்னாண்டோ மற்றும் தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் திரு. க. ரகு ஆகியோர் இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை செய்தனர். தொழில்நுட்ப வல்லுநர்கள் முனைவர் கோ.சந்திரசேகர், முனைவர் வே.கண்ணன், முனைவர் ஆ.மதிவாணன், பண்ணை மேலாளர் திரு.ரெ.வேதரெத்தினம், தொழில்நுட்ப திட்ட உதவியாளர் திரு. வீ. ஞானபாரதி, கணினி திட்ட உதவியாளர் திருமதி.கோ.ரம்யா ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஒப்பம்./xxx

திட்ட ஒருங்கிணைப்பாளர்